அப்படி போடப்பட்டிருக்கிறது. ஆகவே சில்லரை வியாபாரிகளும் பொருள்களை உற்பத்தியாகும் இடத்தில் வாங்கும்போது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், அவைகளை பரிசீலனை செய்து பார்த்து வாங்க வேண்டும். அவைகளை செக் பண்ணி பார்த்து வாங்க வேண்டும்.

Virudunagar

* 372 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to form a new district of Virudunagar from out of Madurai and Tirunelveli districts?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI K. VINAYAKAM : Sir, was any popular representation in the form of mahazar received by the Government in connexion with the formation of a new district known as Virudunagar from the residents, merchants and the neighbourhood of Virudunagar?

THE HON. SRI M. A. MANICKAVELU : Popular or not, I think there was some representation about this matter, not only about this district but also about other districts. The Government have examined this and wanted to do something in that direction. But later on it had been deferred and now we have appointed District Revenue Officers to relieve the work of the Collectors and we shall watch how it works and later on we shall look into it.

SRI A. V. P. ASAITHAMBI : இந்த மாதிரியான ஒரு கேள்வியை முன்பு ஒரு முறை கேட்டதற்கு அவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். இராமனுதபுரம் மாவட்ட தலைநகர் வேறு ஒரு இடத்தில் இருப்பதால் அந்த மாவட்ட மக்கள் ரொம்பவும் அவதிப் படுகிறார்கள். அது கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும், அதைப்பற்றி கனம் அமைச்சருக்கும் ஏற்கனவே தெளிவு படுத்தியிருக்கிறது. மதுரை மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை எடுத்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சில பகுதிகளையும் எடுத்து, எல்லாவற்றையும் சேர்த்து கீழ் இராமனுதபுரத்தை தனியாக அமைத்து வேறு மாவட்டமாகச் செய்து, அப்படி மதுரை மாவட்டத்திலுள்ள பகுதியிலுள்ள சிலவற்றை எடுத்துச் சேர்த்து விருதுநகர் மாவட்டம் என்று ஒரு தனி மாவட்டத்தை ஏற்படுத்தினால் நிர்வாகத்தில் கொஞ்சம் வசதி ஏற்படும் அல்லவா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி ஏற்கனவே நான் பதிலளிக்கும்போது சொன்னேன் இது பரிசீலனையில் இருக்கிறது என்று. அப்பொழுது பரிசீலனையில்தான் இருந்தது. பிறகு அது ஒத்தி வைகப்பட்டிருக்கிறது. இப்பொழுது நான் சொன்னது புதியது. இன்றைக்கு ஒரு டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசரை நியமித்திருக்கிறோம்.

18th February 1961]

Sri N. R. THIAGARAJAN : இராமனாதபுரம் ஜில்லாவிலுள்ள சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய மூன்று தாலூகாக்களையும், நெல்லை ஜில்லாவிலுள்ள கோவில்பட்டி, சங்கரன்கோயில் ஆகிய இரண்டு தாலூகாக்களையும் ஒன்றாகச் சேர்த்து, விருதுநகர் ஜில்லா என்று அமைத்தால், 15 லட்சம் மக்களைக் கொண்ட அழகிய ஜில்லாவாக இருக்குமென்பதைக் கருதி, சர்க்கார் புனராலோசனை செய்யுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த ஜில்லா மாத்திரமல்ல ; கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்கள், இன்னும் பல ஜில்லாக்களையும் இம்மாதிரியாகப் பிரிக்கவேண்டுமென்ற யோசனை வந்தது. தற்காலிகமாக, புதிதாக டிஸ்ட்ரிக்ட் ரெவினியூ ஆபீசர்கள் வேலை செய்கிறார்கள். மறுபடியும் இதைப்பற்றி யோசிக்கலாம்.

Sri A. VEDARATHNAM : கனம் அமைச்சர் அவர்கள், வேறு பல ஜில்லாக்களிலிருந்தும் இம்மாதிரி கோரிக்கை வந்ததாகக் குறிப்பிட்டார்கள். எந்த எந்த ஜில்லாக்களிலிருந்து கோரிக்கை வந்தது என்று அமைச்சர் அவர்கள் தயவுசெய்து சொல்ல முடியுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : தஞ்சை ஜில்லாவும் அவைகளில் ஒன்று.

Dispensary (Ariyalur)

* 373 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the existing staff and bed-strength in the Ariyalur Local Fund Dispensary are adequate?

The Hon. Sri M. A. MANICKAVELU : The present sanctioned bed-strength of the Government Hospital, Ariyalur, is 20 and the staff employed is more than that admissable under the rules. The question of increasing the bed-strength of the hospital is under consideration.

Sri K. R. VISWANATHAN : இந்த அரசாங்க மருத்துவ விடுதியில் அலுவலக எழுத்தாளர், கம்பௌண்டர், இவ்விருவருடைய வேலைகளையும் ஒரே ஒருவர்தான் பார்த்துக்கொண்டு வருகிறார். இந்த மருத்துவ விடுதிக்கு ஐந்து வருஷங்களுக்கு முன் வந்துகொண்டிருந்த புற நோயாளிகளுடைய எண்ணிக்கை இன்றைக்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அப்படியானால், அலுவலக எழுத்தாளர், கம்பௌண்டர் இவ்விரு வேலைகளுக்கும் தனித் தனியே நபர்களை நியமிக்க அரசாங்கம் முன்வருமா ?